3/-

S.K. Nadarajah
Batticaloa

231.08
VAY
AR

ශ්‍රී ලංකා විශ්ව විද්‍යාලය, යාපනය මණ්ඩපය,
පුස්තකාලය
இலங்கைப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகம்
நூலகம்

2007

ஓம்

யாழ்ப்பாணம்—வயாவிளான்

மானம்பராய் என்னுந் திவ்விய தலத்தில்

கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும்

# விக்கினேஸ்வரப் பெருமான்மீது பாடிய

# தோத்திரப்பாமாலை

ஆசிரியர்

ந. நமசிவாயம்

[வயாவிளான்]

43658

விஷு ௵ ஐப்பசி ௴

1941.

இது, எமது அரிய தந்தையும்,
''சுதேசநாட்டிய'' ஆசிரியரும்,
சுதேச வைத்தியருமாகிய
திரு. சி. நல்லதம்பி அவர்கட்கு
அர்ப்பணஞ்செய்யப்பெற்றது.

ஆனந்தகுமரன் அச்சியந்திரசாலை
வயாவிளான், யாழ்ப்பாணம்.

# சாற்று கவிகள்

---

ஏழாலை, திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலை அதிபரும்
ஆயுள்வேத வைத்திய நாற்பரிசோதகரும்
பிரகடன கர்த்தாவுமாகிய
ஸ்ரீமான் ஐ. பொன்னையா அவர்கள்.

---

திருமலி யிலங்கையின் சிரமென விளங்கும்
புரமென வறிஞர் புகழ்ந்து கூறும்
யாழ்ப்பாண மென்னு மெழில்பெறு நாட்டினில்
நற்குலக் குடிகள் பற்பல வாழும்
வயவை யென்னும் மாநக ரதனிற்
சிவனுமை காரி செவ்வேள் முருகன்
தனிமுத லாகிய தலங்க ளேழும்
பொருந்துமா னம்பரா யமர்ந்தருள் செய்யும்
ஆனைமா முகவ னருள்பெற விழைந்து
தேனினு மினிய செந்தமிழ் வளத்தொடு
தோத்திர மாலை யாத்தவற் கணிந்து
சூடின னெவனெனிற் சொற்றிடுஞ் சுதேச
நாட்டிய மென்னு மேட்டினை மிக்க
பத்திர நடாத்தும் பண்புள சுகுணனும்
நல்ல தம்பியின் னற்றவப் புதல்வன்
செந்தமி ழுங்கிலந் தேர்ந்தவா சிரியன்
இலக்கண லக்கிய மினிதுணர் புலவன்
ஈசுர பத்தி யின்சொ லாதிய
தமக்கியல் பாகத் தரிக்கும்
நமச்சி வாய நாமத் தோனே.

புன்னாலைக்கட்டுவன் ஆசிரியர்

## பிரமஸ்ரீ. க. சி. தங்கசாமி ஐயர் அவர்கள்.

### விருத்தம்

சீராரும் வயவைநகர் தன்னின் மேய
சித்திவிநா யகன்பேரிற் சிறப்பு வாய்ந்த
பேராரும் தோத்திரங்கள் பெரிதும் பாடிப்
பிரகடனம் செய்திட்டான் யாவன் என்னில்
ஏராரும் சுதேசநாட் டியமென் றோதும்
இனியதமிழ்ப் பத்திரவா சிரிய னானோன்
ஆராரும் புகழ்நல்ல குணத்தின் மிக்கோன்
ஆயுள்வே தக்கலைகள் ஆய்ந்த ஞானி

தக்கவைத் தியம்புரிந்தே பிணிகள் தீர்க்கும்
தகைமையோன் சைவநெறிச் சால்பின் நிற்போன்
இக்கலியில் அருள்புரியுங் கந்தன் தாசன்
எல்லோர்க்கு முபகாரி யான வள்ளல்
நக்கனருள் பூண்டொழுகும் நல்ல தம்பி
நாமனருள் சுதனாசான் நமச்சி வாயன்
மிக்கவிவன் தமிழ்த்தொண்டும் பக்திப் பண்பும்
விரும்புதமி ழறிஞர்கட்கு விருந்தா மன்றே.

---

பருத்தித்துறை—கலாநிதி யந்திரசாலை அதிபர்

## பிரமஸ்ரீ ச. சோமசுந்தர ஐயர் அவர்கள்.

### வெண்பா

திருவார் வயவைநகர்ச் செல்வ விநாயகர்மேல்
மருவார்நற்றோத்திரப்பாமாலைசெய்தான்—அருள்சேரும்
நல்லதம்பி தன்சேய் நமச்சிவா யன்மகிழ்ந்திங்
கெல்லவரும் போற்ற வினிது.

செந்தமிழு மங்கிலமுந் தேர்ந்தோன் புலமிக்கோன்
சந்ததமு மீசனடி தான்றொழுவோன்—முந்தும்
பெரியோர் தமைப்பணியும் பெற்றியா னன்பர்
அரிய மதிப்புடைய னாம்.

உ

சிவமயம்

# தோத்திரப்பாமாலை

## காப்பு

ஆனை முகனே யரனார் திருமகனே
ஞானந் தருநல்ல நாயகமே—மாநிலத்திற்
பத்தியொடு நின்னைப் பணிந்தே னெனக்குநல்ல
சித்தியெல்லாந் தந்தருள்நீ செய்.

செல்வக் கணபதியே சேவிப்போர் வல்வினைகள்
எல்லா மினிதகற்று மீசனே—தொல்லுலகில்
தெள்ளுதமிழ்ப் பாமாலை தேடியளித் தேனுக்கு
வள்ளன்மை தந்தருள வா.

## பன்னிருசீர் விருத்தம்.

தந்தைநீ தாயுநீ தமருநீ யாகியித்
　　தாரணியி லெற்குறு துணை
தயவாக வேபுரிந் தன்றுமுத லின்றுவரை
　　தற்காத்த தலைவனீயே
இந்தவையி லேசிறியன் நொந்துமனம் வாடாமல்
　　இனிதான நல்வரங்கள்
இங்கித முடன்றந்து காத்தனிற் கழகன்றி
　　யிகழ்தல்சரி யல்லவையா
சுந்தரத் தோளியுமை தந்திடும் பாலனே
　　சுகானந்த தூயவடிவே
சொல்லிடும் பிரணவமொர் பொருளாக வேயெனைச்
　　சோதிக்க வந்தகுருவே
நந்தா வளங்கள்பல சூழுமா னம்பராய்
　　நன்மைபெற மேவுமிறையே
நாடுமடி யார்கள்வினை யோடிடச் செய்புண்ய
　　நாதாந்த முத்திமுதலே. (க)

கல்லாத நாயினேன் செய்பாவ வினையெலாங்
கடிதாக வெனையகலவுங்
காலனார் விடுதூத ரென்னையணு காமலே
காத்திங் கிரட்சிக்கவும்
பொல்லாத பிள்ளிரு ணியமுதற் பேயெலாம்
புறமிட்டு விட்டோடவும்
பொய்யான வாழ்வுநான் வாழாம லேநல்ல
போதனைகள் போதிக்கவும்
தொல்புவியில் நினையன்றி வேறுபொரு ளில்லெனத்
தோன்றுஞா னம்மேவவும்
துய்யநின் செய்யவிரு பாதமே தோஷாத
துணையென மனம்நாடவும்
பல்வளஞ் சேர்வயலை மானம் பாய்தனிற்
பரிவோ டமர்ந்தவிறையே
பாதிமதி சூடுமிறை பாலனே நல்வரம்
பண்பாக நீபுரிவையே. (உ)

ஆதார முனையன்றி யடியனே னுக்கிந்த
அவனிதனில் யார்சொலையா
அன்புட னினைப்பணியு மடியாஞ் ஞானவிரு
ளம்புவியி னீக்குமொளியே
பூதலந் தன்னிலே யேதிலான் போலவே
புந்திமிக நொந்துனதிரு
பொன்னடி வணங்கினே னென்மன திருத்தினேன்
போற்றினே னேத்தினேன்காண்
ஓதரிய பாரதக் கதையைமா மேருவா
மோங்குவெற் பினிலெழுதியே
உலகினர்க ளுய்யவைத் திட்டநல் லுத்தமா
ஓங்கார மானவடிவே
தீதிலா மெய்ஞ்ஞான மென்னிடந் திகழவுன்
திருவருட் புரிகுவாயே
தேனார் மலர்ச்சோலை சூழுமா னம்பாய்த்
திவ்யபதி மேவுமிறையே. (ங)

பங்கயம் போலவிரு கண்ணிருந் தாலுமொரு
பாதைதெரி யாதருடன்
படுகின்ற பாட்டினைப் போலவே யுன்றனிரு
பாதார விந்தங்களை
அங்கயற் கண்ணிமீ னாட்சிதரு மையனே
யடைகின்ற மார்க்கமறியா
தலைகின்ற நாயினே னுய்வழிகள் காட்டியே
யாண்டருளு மைந்துகரனே
தங்குமிடி யோடுபல வின்னலெல் லாமுமித்
தாரணியி லருணன்றனைத்
தான்கண்ட பனிநிகர தாமென்ன வோடியே
தகையசெல் வம்மேவிடச்
சிங்கார மானமுகில் தவழ்சோலை சூழ்ந்திடும்
செய்யமா னம்பாரயில்
சீராக மேவியருள் பாலிக்கு மோரம்ப!
சிறியனேற் கருள்செய்வையே. (௫)

ஆரணமு மறியாத வாரண முகத்தனே
யடியரைக் காக்குமரசே
யமரரொடு முனிவருயர் சித்தர்கந் தருவர்முத
லானபெரி யோர்கள்தாமும்
பூரணா னந்தநின் வடிவுகா ணப்பெறார்
புந்திமிக நாண்மிகுமவே
பூதலந் தன்னிலா டிக்குணிழல் போலினும்
பொன்மேனி காட்டியருளாய்
காரணா நின்னைவழி பாடுசெய் வோர்தமது
கன்மவினை யாவும்பெருங்
காற்றி லேற்பட்டதொரு பஞ்சென்ன வோடவருள்
காட்டுமொரு கணநாதனே
தோரண மலர்ச்சோலை சூழுமா னம்பாரய்த்
தோமில்பதி மேவுமிறையே
தூய்யனே ஞாத பத்தியொடு மேத்தினேன்
தொண்டனேற் கருள்செய்வையே. (௬)

கங்கா தரன்சுதா மங்கையுமை கண்மணிக்
கணபதி காருண்யனே
கதிர்காம வடிவேல ராசைமிகு தமயனே
கவினுத்தி மலர்மாலையாய்
அங்கிங்கெ னுமலே யெங்கும்ப்ர காசமாய்
ஆனந்த மானமயமே
யருள்வடிவ னேசகல குணவடிவ னேயென்னை
யாட்கொள்ள வந்தவருளே
பொங்குகடல் தன்னிலே யலைமோதல் போலவே
புவியென்ற கடன்மீதிலே
பொருளென்ற வாசையா லலைமோது மெற்குநீ
பொன்றிடா வழிசெய்குவாய்
மங்காத சீர்த்திநிறை மானம்ப ராயென்ற
மாண்பதியி லமருமிறையே
மகிபனே கரியமால் மருகனே நல்வரம்
மனமுவந் தருள்செய்வையே. (சு)

சேலொத்த விழிமாத ராசைவலை தன்னிலே
சிக்கியான் வீழாமலே
செகமீதில் நின்னையே சேவித்து மோட்சமாம்
செய்யவழி யேகவிடுவாய்
பாலொத்த மொழிமங்கை யாம்சக்தி யன்போடு
பாராட்டி மகிழ்செல்வனே
பத்தியொடு மேத்துவார் சித்தங்க ளிக்கவே
பண்புடன் வரமீகுவாய்
நூலொத்த சிற்றிடைத் தேவிவல் லபைநாத
நுண்ணறிஞர் ஏத்துமையா
நோற்றிடும் வள்ளியைப் புனமீதில் நம்பிக்கு
நொடியிலரு ளொடுகூட்டினோய்
கோலமார் காவெலாம் மேவுமா னம்பராய்க்
கோநில்பதி மேவுமிறையே
கோகனத மலரைநிகர் நின்னிரு பதங்களைக்
கோரினே னருள்செய்வையே. (எ)

தான்பெற்ற சேயினைத் தாய்தள்ள னீதமோ
தன்மமோ சொல்லுமையா
தாரணியி லென்றனைக் கைவிடா தீரெங்கள்
தந்திமுக வைந்துகரனே
கான்பட்ட கண்ணிமிசை மான்பட்ட வாறுபோற்
கதியின்றி வாடுகின்றேன்
காற்றென்ற மூவாசை மாறுதற் சுழனின்று
காத்துமிக ரட்சிக்கவே
வான்பெற்ற நதிசூடு மிறைவர்தரு மையனே
வானவர்கள் துதிநாதனே
வாகான நல்வரந் தந்தென்னை யாளவே
வரவேணு மிதுசமயமே
தேன்பெற்ற சோலைசூழ் மானம்ப ராய்தனிற்
றிகழுமென் குருநாதனே
தினகரன் போலவஞ் ஞானவிருள் நீக்குமுயர்
தேசோ மயானந்தமே. (அ)

மூந்தைநா ளவுணருறை முப்புரந் தன்னையோர்
முறுவலா லெரிசெய்தநம்
முக்கணு னாரிபத வச்சினைப் பொடிசெய்த
முதல்வனே யதிதீபனே
தந்தைதாய் நீயென்று தஞ்சம் புகுந்திடுந்
தனியேனை யாண்டருளுவாய்
தற்பரா சிற்பரா சச்சிதா னந்தமே
தவிக்குதென் நெஞ்சமையா
சிந்தைமிக நொந்துநான் செய்பிழைகள் யாவுமே
செகமீதி லேபொறுத்துத்
தீதான களவுகொலை காமமிவை யணுகாது
சிறியேனை நீயாளுவாய்
சுந்தரம் பொலிவயலை மானம்ப ராய்தனிற்
றொன்மையோ டமருமிறையே
சுத்தசாட் குண்ணியா நித்தபரி பூரண
சோதியே சுகவாரியே. (க)

தொல்லுலகில் யான்பிறந் தல்லலுற் றிடுகிறேன்
தொல்லைவினை தாமேனுமிது
தொண்டுசெய் துய்கின்ற பேறெனக் கிந்தமே
துய்யனே துணைபுரிகுவாய்
கல்லோடு சமணர்திரு நாவினுக் கரசரைக்
கட்டியே கடலிலிட்ட
காலத்தில் நின்றந்தை நாமமே யவர்தமைக்
காத்துமிக ரட்சித்ததே
பொல்லாத துட்டர்சக வாசமத கற்றியே
போதனைகள் போதித்தெத்மைப்
புவிமீதில் நின்னடிய ரழியாத தொண்டிலே
புகுவிக்க விங்குவருவாய்
மல்லலுறு சோலைசூழ் மானம்ப ராய்தன்னில்
மாட்சியுட னமருமிறையே
மத்தள வயிற்றனே யுத்தமிதன் மைந்தனே
மதியிலேற் கருளுவாயே. (க0)

கஞ்சனும் மாமனைக் கன்றவதை செய்திட்ட
கரியதொரு மான்மருகனே
கண்டென வினிக்குமுன் கனிரு மொழிகளென்
காதிலெப் போகேட்குமோ
கொஞ்சுகிளி மொழியன்னை பார்வதி யன்புடன்
கொண்டகனி யைப்பெற்றிடக்
கோரியே தந்தைதாய் தன்னையே யுலகெனக்
கோலமுற வலம்வந்தவா
தஞ்சமென நின்னையே கெஞ்சினேன் மகிழுவே
தாரணியி லென்றனக்குத்
தகுதிபெறு செல்வமொடு கல்விமுத லாய்பேறு
தந்துநா னகமகிழவே
மஞ்சுதவழ் சோலைசூழ் மானம்ப ராயென்ற
மாண்பதியி லமருமெங்கள்
மங்காத தீபமே நங்கையுமை பாலனே
மறவாம லருள்செய்வையே. (கக)

ஆடல்வேய்த் தோளியம் பிகைமகிழ மடிமீதி
லார்ந்துமே யவள்தந்திடும்
ஆரமுத மானதிரு மாமுலைப் பால்குடித்
தகமகிழு மானந்தனே
கூடலிற் செம்மனச் செல்விபிட் டுக்குமண்
கோலமுட னேசுமந்து
கொண்டங்ங னடிபட்ட வானருளு மைந்தனே
குஞ்சர முகத்தினனே
பாடான மிடியென்ற பகர்பிணியி னுன்மிகப்
பாவியேன் வாடாமலே
பார்மீதி னீங்காத நிதியீந்து மேயெனைப்
பரிவுடன் காக்கவருவாய்
பீடாரு நல்வளஞ் சூழுமா னம்பராய்ப்
பேரான பதியில்மேவும்
பிஞ்ஞகா யான்மகிழ்வு கொள்ளவே நற்பேறு
பேதையேற் கருள்செய்வையே. (கஉ)

வஞ்சமலை இன்றியே வந்தநஞ் சினையும்பர்
வழிபாட்டி னுக்கிரங்கி
வன்மமுட னேயுண்ட திருநீல கண்டராம்
வள்ளலா ருதவுசுதனே
தஞ்சமொன் றின்றியே தாயிலாச் சேயன்யான்
தாரணியில் மிகவுநொந்து
தவியாமலையநீ யடியனேன் மகிழவொரு
தருநல்ல வரமீகுவாய்
கஞ்சமல ரனையநின் பதமலர் வழுத்தினேன்
காட்சிமிக வீயநல்ல
கவினுரு மூஷீக வாகனம தூர்ந்துமே
கணபதீ வருகுவாயே
மிஞ்சுபுகழ் மாவயவை மானம்ப ராயென்னு
மிக்கபதி மேவுமிறையே
மேலான நல்வரந் தந்தென்னை யாள்வைநீ
வேண்டினேன் சமயமிதுவே. (கங)

மும்மலச் சூறையிற் சிக்கியே மூடனேன்
மூழ்கிமிக மோசமானேன்
முன்னுவார் தம்பர்வ வினையெலா மோடவே
முன்னர்வந் தருளுமீசா
செம்மைபெறு நல்வாழ்வு வாழ்வதற் குன்னியே
சிந்தைமிக வாடியடியேன்
செஞ்சொலா லாக்குகவி மாலைதனை யன்போடு
செல்வமே சூடுவாயே
இம்மைமறு மைப்பிணியை நீக்குதற் குப்பெரிய
வின்பமார் நன்மருந்தே
எழிலாரு நின்முகப் பொலிவுநான் கண்டிடவு
மிதமொழியி னைக்கேட்கவும்
அம்மைநிறை சோலைசூழ் மானம்ப ராயிலே
யருளொடுறை யானந்தமே
அடியனேன் முன்பாக வந்துமகிழ் விப்பதற்
கானதோர் சமயமிதுவே. (கச)

உன்கிருபை யாலிந்த வுலகின்மா னிடனென்
றுதித்துளேன் நீயுமெற்கு
உடையுணவு முதலான பொருள்கள்பல வீந்துமே
யுதவிபல செய்துவந்தாய்
இன்னுமென் னென்னதான் வேண்டுமோ வவையெலா
மினிதெனக் காற்றுகின்றாய்
இவ்வுலகி லென்னையொரு நன்மனுஷ னாகவே
எந்தையே யாக்கினீரோ
அன்னைதந் தையைமறந் தாலுநின் தன்னையே
அவனிதனி லென்றுமறவேன்
அன்பைமற வேனினது இன்பைமற வேனினது
ஆராத வருளைமறவேன்
மன்னுபல சீர்வயலை மின்னுமா னம்பராய்
மாகமதி லுதிமதியமே
மலர்கொண்டு நின்பாத மலர்தூவி னேனிதய
மலர்விரிய வருள்செய்வையே. (கரு)

தான்பெற்ற மைந்தனுறு பசிநோய் வருத்தத்
தவிக்கின்ற கோலமதனைத்
தாய்கண்டு மவனுக்கு நல்லமுத மீந்திடாத்
தன்மைபோன் றுந்தன்னருஞ்
ஞானசன் மார்க்கனாய்த் தோன்றவழி காட்டியே
துணைசெயாத் தந்தைபோலும்
தொண்டுசெய் துய்ந்திடுஞ் சீஷனாய் வழியெலாந்
தோற்றிடாக் குருபோலவும்
நான்புவியி லேபிறந் துயர்மனுஷ னாகுமோர்
நல்லவழி காணாமலே
நலிகின்ற நிலையினைப் பார்த்துமே யென்னருகு
நண்ணா திருத்தலழகோ
தேன்சொரியு நன்மலர்க் காபல நிறைந்திடும்
திவ்யமா னம்பராயில்
தேடுதற் கரியதோர் பொருளாக வந்திடும்
சித்சுகோ தயதீபமே. (௧௬)

உன்னடிணைப யனுதினமு முன்னுவார் தங்களது
உறவுநான் கூடவேண்டும்
ஓவாத காதலுட னின்புகழை நானிதமு
மோதுமொரு பேறுவேண்டும்
என்னெஞ்ச முருகிநின் னிருகமல பாதமதை
யெந்நாளு மேத்தவேண்டும்
எழிலாரு முன்முகப் பொலிவுகண் டுள்ளமது
என்றுங்க ளிக்கவேண்டும்
துன்பமென் னுங்கடலி லாழ்ந்துதவி யாததோர்
துணையெனக் கீயவேண்டும்
துகளிலாக் கலைவேண்டு மிகழ்விலா நிதியுடன்
துங்கமிக மேவவேண்டும்
நன்மைசெறி வயவைமா னம்பராய் வந்திடும்
நாடரிய நந்தெய்வமே
நவையில்மணி யேயடியர் சபையில்மணி யேயெற்கு
நன்மையருள் தெய்வமணியே. (௧௭)

பேராத பந்தபா சத்தினிற் கட்டுண்டு
பிறழா திருக்கவேண்டும்
பெண்மோக வலையினிற் சிக்கிமா ழாததோர்
பேறுநித மருளவேண்டும்
தீராத நோயினைப் பற்றாது நான்நல்ல
திடமாக வாழவேண்டும்
தீயர்சக வாசமத கற்றியே சற்சனர்கள்
திகழுமவை சேரவேண்டும்
சாராத வென்பகைவ ரென்னைவந் தணுகுநாட்
சலியாத நிலைமைவேண்டும்
சரசுவதி யோடுசெந் திருவுமென் பாணிதம்
சார்ந்துமே வாழவேண்டும்
ஆராத புகழ்வயவை மானம்ப ராயுறையும்
அத்திமுக வாதிமணியே
ஆசைமணி யேநல்ல நேசமணி யேயென்னை
யாட்கொள்ள வந்தமணியே. (கஅ)

பலகோடி சூரியர்கள் போலவொளிர் வதனமும்
பகர்பிறை யணிந்தகோடும்
பாங்குபெறு செம்மேனி யுந்தூங்கு செவிகளும்
பனிமலர்க் கண்ணுமழகார்
நலமான பேழைவயி றோடைங் கரங்களும்
நண்ணுமங் குசபாசமும்
நவமான மணிமார்பில் நல்லவா பரணமும்
நாடுமுப் புரியினாலும்
வலமான வரையினிற் பட்டாடை யோடுபொன்
மன்னுமரை ஞாணுமுறவே
வல்லவோர் பிரணவப் பொருளாக வேயென்னை
வாழ்விக்க வந்தபொருளே
அலகிலழ செறிசோலை மானம்ப ராய்மையு
மத்திமுக முத்திமுதலே
அடிமைவினை யகலவரு ளானந்த நல்குவாய்
ஐயநீ வருகுவாயே. (கக)

## சந்த விருத்தம்

[மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிரு] என்னும்
தேவாரம் போல்வது

காலனார்விடு தூதர் மாருயிர்
கவர வந்திடும் போதினில்
ஏல வேதுணை யாக நின்றுநீ
யேற்ற நல்வர மீகுவாய்
கோல மார்ந்திடு காவெ லாம்பொலி
கோதில் மானம்ப ராயிலே
சீல மாகவே மேவி வாழுமென்
சிந்து ரமுகச் செல்வமே. (௧)

பந்த பாசங்க ளெந்தனை யிந்தப்
பாரி னிற்பந்தி யாமலே
சிந்தை யான்மகிழ் கொண்டி டுமொரு
செய்ய நல்வர மீகுவாய்
சுந்த ரம்பொலி சோலை கள்பல
சூழ்ந்து மேவுமா னம்பராய்
வந்து றைந்திடு மைங்க ராவெனை
வாழ்விக்க வந்த வையனே. (௨)

பத்தி யோடுனை யேத்து வார்வினை
பஞ்சு போற்பறந் தோடுமே
இத்த ரையினி லென்ற னக்குய
ரேற்ற நல்வர மீகுவாய்.
எத்தி சைக்குமோர் நற்ற லமென
வேத்திப் போற்றுமா னம்பராய்
அத்தி மாமுக வெண்ணை யாண்டிடு
மன்ப ருக்கரு ளன்னையே. (௩)

பாலி னேர்மொழி மாத ரார்தங்கள்
பற்று வைத்துநா னன்னவர்
மாலி னில்மயங் காத தோர்நல்ல
மாண்வ ரமெனக் கீகுவாய்

வாலி யமக்கள் சால வும்புகழ்ந்
தேத்திப் போற்றுமா னம்பராய்
மேல வாவெனை மேவி டுந்துயர்
மெத்தவு மெட்டப் போகுமே. (௪)

தஞ்சம் நீயெனக் கெஞ்சு வார்துயர்
தானொ ருகோடி யேகுமே
பஞ்சின் மெல்லடிப் பாத மேத்தினேன்
பண்பு டன்வர மீகுவாய்
மஞ்சு கள்தவழ் சோலை சூழ்ந்திடும்
மாட்சி மிக்கமா னம்பராய்
குஞ்ச ரமுக நெஞ்சி னிலுறு
சஞ்சல மெல்லா மேகுமே. (௫)

நீரி னிற்குமிழ் நீண்ட சொப்பனம்
நேரு மானிட வாழ்விது
பாரி னில்மலர்ப் பாத மேத்தினேன்
பண்பு டன்வர மீகுவாய்.
சாரு நல்லடி யார்நி தம்புகழ்
சாற்றிப் போற்றுமா னம்பராய்
கார ணாகரி மாமு காவெனைக்
காத்து ரட்சிக்கு மீசனே. (௬)

பொய் யுடம்பிதை மெய்யென் றுன்னுவர்
பூத லத்துறு மாந்தர்கள்
பொய்யை மெய்யென்று நம்பி டாதமேதோர்
போற்று நல்வர மீகுவாய்
செய்ய தாமரைச் செல்வி வாழ்கின்ற
சீர்நி றைந்தமா னம்பராய்
மெய்ய னேயெனை மேவி யாண்டருள்
மேன்மை சேர்ந்திடு மையனே. (௭)

தந்தை தாய்தமர் நீயலா லெற்குத்
தார ணிதனி லார்துணை
சிந்தை யான்மகிழ் கொள்ள வேயொரு
செம்மை நல்வர மீகுவாய்

சந்த மார்ந்திடு நல்வ ளம்பல
சார்வ யவைமா னம்பராய்
எந்தை யேநினை யேத்தி னூறு
மின்ன லெல்லாமு மேகுமே. (௮)

பிள்ளை செய்பிழை தாய்பொ றுத்தல்போல்
பேதை யேனிந்த வுலகினில்
பிள்ளை யின்மதி தன்னாற் செய்பிழை
போக்கி நல்வர மீகுவாய்
தெள்ளு நற்றமிழ் வாணர் போற்றிடும்
திவ்ய மானமா னம்பராய்
வள்ளலே பெருச் சாளிவாகன
வானவர் துதி நாதனே. (௯)

என்னி ருபெருங் கைகள் கூப்பியே
யேத்தி னேனினைப் போற்றினேன்
என்ம னத்தினி லுன்னி னேற்குநீ
ஏற்ற நல்வர மீகுவாய்
கன்ம னத்தரும் காசி னியிலே
கைதொ ழும்நல்மா னம்பராய்
மன்ன வாநின்றன் நாம மேயார்க்கும்
மதிக்கு மோர்துணை யாகுமே. (௧0)

ஐங்க ரனும்பர் சங்க ரன்மைந்த
னான அத்திநல் மாமுகன்
தங்க வேல்முரு கேச னன்புறு
தம்மு னாகவே வந்துளான்
மங்கை யீஸ்வரி யிங்கி தம்பொலி
மைந்த னெங்கள்மா னம்பராய்
தங்கி வாழ்ந்திடு தற்ப ரனவர்
தகைமை சாற்றுதற் காகுமோ. (௧௧)

## கீர்த்தனம்

[அருமருந்தொரு திருமருந்திதை அம்பலத்திற் கண்டேனே]
என்றமெட்டு

### பல்லவி.

மானம்பராயில் மருந்தொன்றிருக்குது
மட்டில் கிருபைதரும்—அது
சிட்டர்க் குதவிதரும்.

### சரணம்.

1. கங்கை யணிபரன் தந்த மருந்து
காலனுர் தூதரை வெல்லு மருந்து
பங்கம் விளைபல நோய்களைப் போக்கியே
பாரினி லின்பம் பயக்கு மருந்து. ... மானம்

2. மங்கை யுமையவள் தந்த மருந்து
மாலயன் காணுத மாட்சி மருந்து
எங்கள் பதிக்கிது ஏற்ற மருந்து
எந்நாளு மின்பமே யீயு மருந்து ... மானம்

3. ஆறு முகற்குமுன் வந்த மருந்து
ஆனை முகமா யமர்ந்த மருந்து
வறுமைப் பிணிக்கொரு வாய்த்த மருந்து
வந்திப்போர் துன்பங்கள் தீர்க்கு மருந்து ... மானம்

4. கானக வள்ளியைக் கானக மீதினில்
கந்தனும் நம்பிக்குக் காட்டு மருந்து
மோனர்க் கருளுமு முதன்மை மருந்து
முத்திக்கு வித்தாக நின்ற மருந்து ... மானம்

5. ஆதியு மந்தமு மில்லா மருந்து
அன்ப ருளத்தி லிருக்கு மருந்து
சோதிப்ர காசமாய் நிற்கு மருந்து
சுந்தர ரூபமாய் வந்த மருந்து ... மானம்

6. பாச வினைகளைப் போக்கு மருந்து
பாவி துயரெலாந் தீர்க்கு மருந்து
தேசோ மயமாக நின்ற மருந்து
தேடவும் காணுத திவ்ய மருந்து ... மானம்

7. ஓமென்ற பிரணவ மான மருந்து
உண்மைப் பொருளாக நின்ற மருந்து
சேமந் தருமொரு செய்ய மருந்து
சேர்பிணி போக்கும் சிறந்த மருந்து ... மானம்

8. காணக் காணா வருள் காட்டு மருந்து
கண்ணன் மருகனாய் வந்த மருந்து
ஆணிப்பொன் னாகவே வந்த மருந்து
ஆவிக் காதாரமாய் நின்ற மருந்து ... மானம்

9. பாரத நற்கதை மாமேரு மீதினில்
பக்குவ மாக வெழுதும் மருந்து
சீரான நல்வர மீயு மருந்து
சிறியனை வாழ்விக்க வந்த மருந்து ... மானம்

10. வயவைமா னம்பராய் வந்த மருந்து
வல்ல பரம்பொரு ளாகு மருந்து
கயவ னெனக் கருள் செய்யு மருந்து
கவலை தனைப்போக்கும் கட்டி மருந்து ... மானம்

11. இந்த மருந்திதை மானம் பராவென்ற
எங்கள் பதியினிற் கண்டேனே
சிந்தை மகிழ்ந்தது செல்வ மிகுந்தது
சிங்கார மாய்க்களி கொண்டேனே ... மானம்

---

# வருகை அகவற்பா

---

ஆனை முகமும் அருள்பொழி கண்களும்
மோன வடிவும் மூலா தாரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
பஞ்சின் மெல்லடிப் பதங்களு மழகார்
அரையிற் பட்டும் அரைஞாண் கயிறும்
புரைதீர் முப்புரி நூலும் பொருந்து
பிரணவப்பொருளாம் பெருந்தகை யைங்கரா
சரண வற்புதமலர் சாத்தினேன் வருக!
மானம் பராவெனும் மாண்பதி யமரும்
ஞானோ தயமே ஞயமுடன் வருக!

தந்தையும் நீயே தாயும் நீயே
பந்துவும் நீயே பரிவுடன் வருக!
விக்னேஸ் வரனே விநாயக மணியே
விக்கின மென்னை விலகிட வருக!
மதியணி சங்கரன் மகனே வருக!
கதியளித் தருளுங் கணபதி வருக!
முன்னுள் வினையெலா முற்றறப் போக்கி
இந்நா ளின்பளி யேந்தால் வருக!
பிறவி யென்னும் பெருங்கடல் தாண்டி
இறவா வரந்தர இம்பரில் வருக!
பாச வினையெனைப் பற்றிடா திருக்க
ஈசனே யென்முன் எழிலுடன் வருக!
தொலையாத் துன்பப் படுகுழி வீழ்ந்தே
அலையா வண்ண மாட்கொள்ள வருக!
வறுமைப் பிணியெனை வருத்திய ததனால்
சிறுவன் நொந்தேன் சீக்கிரம் வருக!
பிள்ளைநான் செய்த பெரும்பிழைபொறுத்தே
உள்ளங் குளிர்வர முதவிட வருக!
பொய்கொலை களவு பொறாமை வஞ்சகம்
செய்பவ மாகிய தீர்த்திட வருக!
கல்வி செல்வம் கதித்திடு வாழ்வு
நல்ல குணமெனை நாடிட வருக!
கண்ணுண் மணியே கயமுக வருக!
மண்ணு மணியே மதியே வருக!
என்னிரு மலர்க்கை யிதயத் திருத்தினேன்
நின்னிரு பதமலர் நேடினேன் வருக!
செய்வினை தீர்க்கும் செல்வமே வருக!
மெய்மகிழ் வரமெனை மேவிட வருக!
எந்தாய் வருக! என்குரு வருக!
சிந்தா மணியே சிறியன்முன் வருக!
ஐயா வருக! அருள்மணி வருக!
மெய்யா வருக மேலோய் வருக!
ஐங்கர வருக! அடியன்முன் வருக!
பொங்கர வணிந்தோன் புதல்வா வருக!
வருக! வருக! வள்ளலே வருக!
தந்திடக் கல்வியும் தணவாச் செல்வமும்
வந்திடப் புகழும் வானவா வருக
கருணைக்கடலே கதிநீ தானே!

## சந்த விருத்தம்

("திருமகளுலாவு" என்னும் திருப்புகழ் போல்வது)

ஆதியொடு அந்த மேதுமிவை யில்லா
ஆனைமுக மான பெருமாள்காண்
பாதிமதி வேணி யீசர்தரு பாலன்
பாவிவினை யேக வருள்சீலன்
பூதியணி யன்பர் மேதினியின் மீதில்
பூசைசெய வங்கு புகுலோலன்
சோதிமய மான மாவயவை வந்த
சொல்லுபுகழ் மேவு பெருமாளே. (க)

கூறுமுடல் பாதி கொண்டபர னார்தம்
கோலமுறு மைந்த குருநாதா
நாறுமுடல் கொண்டு சீறுவினை யுந்த
நாயனுறு துன்ப மதுதீராய்
ஆறுமுக னைநேசமுறு தம்மு
னுகவரு மத்தி முகனேநல்
கூறுபுகழ் சேரு மாவயவை வந்து
கோலமுற மேவு பெருமாளே. (உ)

அல்லலுறு நோய்கள் தொல்லுலகி லென்னை
அல்லலுற வைத்த வதனாலே
புல்லன்மிக நைந்து புந்திமிக நொந்து
பூமியிலோர் ஏதை யதுவானேன்
மல்லலுறு மாத்தி மாலையது சூடு
மன்னவரு ளிங்கு தருவாயே
நல்லபுகழ் சேரு மாவயவை வந்த
நங்கையுமை யீன்ற பெருமாளே (ங)

வேதமது வாலுங் காணமுடி யாத
வேழமுக மான பெருமாள்காண்
ஓதரிய நல்ல பாரதமோர் காதை
ஒங்குமக மேரு வெனுவெற்பில்

கூர்த்துட னங்குமேயெழுதி யிட்ட
கண்ய! அருளிங்கு தருவாயே
நீதில்புக ழாரு மாவயவை வந்த
தேடரிய வெங்கள் பெருமானே. (௪)

## கட்டளைக் கலித்துறை.

அத்தி முகனை யரனார் மகனைநல் லேங்கரனைப்
பத்தர் வணங்க வவர்க்கருள் செய்யும் பரம்பொருளை
சித்தி தருமெங்கள் மானம் பராயுறை தேசிகனைப்
பத்தி யொடுபணி வார்வினை யேகுமிப் பார்மிசையே.

கங்கை யணிபரன் தந்த மகனைக் கயமுகனை
மங்கை யுமைதரு பாலனை மட்டில் கருணையனை
எங்கள் பதியி னுபர்நா யகனை யெழின்மணியைப்
பங்க மறத்தொழு வார்வினை யேகுமிப் பார்மிசையே.

என்னு ருயிரினை யேழைபங் காளனை யெங்குருவைப்
பொன்னுரு மேனி யனையாத்தி சூடிடும் புங்கவனை
மின்னார் திருவய வைப்பதி மேவிடு மெய்ம்மணியை
எந்நா ளினுந்தொழு வாரின்ப மெய்துவ ரீதுண்மையே.

## வாழி விருத்தம்.

சீராரு மந்தணரான் செங்கோன் மன்னர்
தெரிவையர்கற் பெஞ்ஞான்றும் சிறந்து வாழி
ஏராரும் வயவைமா னம்ப ராயில்
இருந்த—ள்செய் யோம்ப னினிது வாழி
தாராருஞ் சோலைசூழ் எழ்தலத்துத்
தளிகளமர் தெய்வதங்கள் சதமும் வாழி
பாராருந் தோத்திரப்பா மாலை தன்னைப்
பத்தியுடன் படிப்போர்கள் வாழி வாழி.